## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்
## பல்கலைக்கழக அனுமதி 2022/2023
## இளங்கலைமாணி மொழிபெயர்ப்பு சிறப்புக் கற்கைநெறிக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சை
## (தமிழ் / ஆங்கிலம்)

2022/2023 கல்வியாண்டுக்கான **இளங்கலைமாணி மொழிபெயர்ப்பு சிறப்புக் கற்கைநெறி**க்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து, உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இரு பரீட்சை நிலையங்களில் 14.10.2023 அன்று நடாத்தப்படவிருக்கும் இப்பரீட்சை, விண்ணப்பதாரியின் தமிழ் மற்றும் ஆங்கில மொழித்திறனைப் பரீட்சிக்கும் நோக்கில் அமையும்.

இக்கற்கைநெறியைத் தெரிவுசெய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சை - 2022 இல் எப்பிரிவிலேனும் பிரதான பாடங்களில் ஆகக்குறைந்தது மூன்று சித்திகளைப் பெற்றிருப்பதோடு, 2022/2023 ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அனுமதிக்கான கையேட்டின் பிரகாரம் அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் **www.esn.ac.lk** என்ற கிழக்குப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை முழுமையாகப் பூர்த்திசெய்து உரிய ஆவணங்களின் scan copy களுடன் இணையவழி (online) மூலம் சமர்ப்பித்தல் வேண்டும் (ஒவ்வொரு ஆவணங்களினதும் அளவு 50mb க்கு மேற்படாத வண்ணம் உறுதி செய்க.). அவ்வாறு சமர்பித்ததும் PDF வடிவில் தங்கள் விண்ணப்பத்தைத் தரவிறக்கம் செய்ய முடியும். இதனைப் print செய்து கையொப்பமிட்டபின் இவ் விண்ணப்பப்படிவத்துடன், ரூபா 1200 ஐ எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலேனும் நிதியாளர் பெயரில் கிழக்குப் பல்கலைக்கழகம், செங்கலடி, கணக்கு இலக்கம் 227100140000024 இற்குச் செலுத்திய பற்றுச்சீட்டு, பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. (உயர்தரப்) பரீட்சை – 2022 இற்கான பெறுபேற்றுப் பத்திரத்தின் பிரதி (photocopy), உளச்சார்புப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டையை அனுப்புவதற்கான 10 ½ x 22 ½ செ.மீ அளவு கொண்ட சுய முகவரியிடப்பட்ட ரூபா 50 பெறுமதியான முத்திரையொட்டிய ஒரு கடித உறை ஆகியவற்றை இணைத்து **உதவிப் பதிவாளர், பதிவாளர் அலுவலகம், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி** எனும் முகவரிக்கு **20.09.2023** அன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தங்கள் விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் தொடர் இலக்கத்தினை (serial number), பதிவுத்தபாலின் இடது பக்க மேல் மூலையில் முதலில் தெளிவாகக் குறிப்பிட்டு, **"உளச்சார்புப் பரீட்சை 2022/2023 (இளங்கலைமாணி மொழிபெயர்ப்பு சிறப்புக் கற்கைநெறி)"** என எழுதுதல் வேண்டும். **உரிய தகைமைகளைக் கொண்டிராத, பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத, உறுதி செய்யப்படாத பெறுபேற்றுப்பத்திரப் பிரதிகளுடன் கூடிய, முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத, மற்றும் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள்** யாவும் நிராகரிக்கப்படும்.

பரீட்சைக்குரிய பிரவேச அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டையும், அறிவுறுத்தல்களும் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்- 065-224 0533 / 0762069213 / 0714873831

பதிவாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
வந்தாறுமூலை,
செங்கலடி.
05.09.2023

# Eastern University, Sri Lanka
# Faculty of Arts & Culture
# University Admissions 2022/2023
# Bachelor of Arts Honours Degree in Translation Studies
# Application for the Aptitude Test
# (Tamil / English)

Applications are invited from eligible candidates to appear for the Aptitude Test in order to get selected to the Bachelor of Arts Honours Degree in Translation Studies (four-years) at Eastern University, Sri Lanka for the academic year 2022/2023. The Test which has been designed to test the language aptitude in Tamil & English shall be conducted in Batticaloa & Jaffna on 14th October 2023.

Those who have a minimum of three passes at the G.C.E. (A/L) - 2022 examination, in any stream, as per the Hand Book of the Admission to Undergraduate Programmes of the Universities in Sri Lanka for the Academic Year 2022/2023 issued by the University Grants Commission, are eligible to apply for this degree programme.

Applicants are hereby requested to visit the university website (www.esn.ac.lk) to fill out and submit the application form via online along with the scanned copy (keep each soft copy less than 50 MB in size) of the relevant documents. After submission, your application form will become available for download in PDF format, and the same should be downloaded, printed, signed by the applicant and sent by registered post along with a copy of G.C.E. (A/L) 2022 result sheet/certificate as applicable, a copy of the certificate/result sheet of the Common General Paper, both attested by the Principal of the School or a Justice of the Peace, a paying-in-slip for the payment of Rs.1200.00 drawn in favor of the Bursar, Eastern University, Sri Lanka, to the account No.227100140000024 of People's Bank, Chenkalady, paid at any branch of the People's Bank being the fee for the above test, and a self-addressed envelope (10 ½ x 22 ½ cm in size) with a stamp to the value of Rs.50.00, to be used to post the admission card to the eligible candidate. The duly filled-out application forms should reach the **Assistant Registrar, Office of the Registrar, Eastern University, Sri Lanka, Vantharumoolai, Chenkalady** by registered post **on or before 20.09.2023**.

The **serial number** appearing on your downloaded application form should be written first, followed by **"Aptitude Test- 2022/2023 (BA Honours in Translation Studies Degree Programme)"** on the upper left-hand corner of the envelope of your registered post. Incomplete/late applications and the applications which do not have relevant/minimum qualifications or which are unaccompanied by the pay-in-slip for Rs. 1200.00 or attested copies of relevant certificates, will be rejected forthwith.

Admission cards/related instructions for the Aptitude test will be sent to the eligible candidates by post / email. Please contact 065-224 0533 / 0762069213 / 0714873831 for further details.

Registrar,
Eastern University, Sri Lanka,
Vantharumoolai,
Chenkalady.
05.09.2023